tnkalvi.online

3.இனப்பெருக்க நலன்

1) இனப்பெருக்க நலன் என்றால் என்ன ?

- அமைப்பு மற்றும் செயல்ரீதியாக இயல்பாக செயல்படும் இனப்பெருக்க உறுப்புகளைப் பெற்றுள்ள மக்களைக் கொண்டு சமூகத்தைக் குறிப்பதே இனப்பெருக்க நலன் எனப்படும்.

2) பனிக்குடத் துளைப்பு (ஆம்னியோசென்டெசிஸ்) மற்றும் அதன் சட்டபூர்வமான தடை யாது ?

- இது குழந்தை பிறப்புக்கு முன் செய்யப்படும் ஒரு தொழில் நுட்பமாகும். இத்தொழில் நுட்பம் மூலம் வளர்கருவின் குரோமோசோம் குறைபாடுகளைக் கண்டறியலாம்.
- ஆனால், இத் தொழில்நுட்ப முறையை தவறாகப் பயன்படுத்தி வளர்கருவின் பால் தன்மை கண்டறியப்படுகிறது.
- குழந்தையின் பால் தெரிந்துவிட்ட பிறகு பெண்கரு கொலை செய்யப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, இத்தொழில் நுட்ப முறைக்கு சட்டபூர்வமானத் தடை அவசியமாகின்றது.

3) குடும்பக் கட்டுப்பாடு என்றால் என்ன ?

- கருத்தடை முறைகளை தன்னிச்சையுடன் பயன்படுத்தி கருவுறுதலையோ அல்லது கருப்பையில் கரு பதித்தலையோ தடுக்கல் பொதுவாக "குடும்பக் கட்டுப்பாடு" எனப்படும்.

4) ஒரு சிறந்த கருத்தடை அமைப்பின் பண்புகள் யாவை ?

- பயனர் நட்பு, எளிதில் கிடைத்தல், குறைந்தபட்சம் பக்க விளைவு மற்றும் பாலுணர்வு உந்தலை தடை செய்யாமை ஆகியவை ஒரு சிறந்த கருத்தடை அமைப்பின் பண்புகளாகும்.

5) கருத்தடை முறைகளின் இருவகைகள் யாவை ?

1. தற்காலிக முறை - இயற்கை கருத்தடை முறை, முன் வேதிப்பொருள் பயன்பாடு முறை, கருவின் பயன்பாடு முறை மற்றும் ஹார்மோன் தடுப்பு முறை போன்றன தற்காலிக முறையில் அடங்கும்.
2. நிரந்த முறை - அறுவை சிகிச்சை மூலம் கருக்குழல் தடை, விந்து குழல் தடை போன்ற இனப்பெருக்க ஆற்றலை நீக்குதல் இம்முறையில் அடங்கும்.

6) இயற்கை கருத்தடை முறை :

- இம்முறையில் விந்து செல்களும் அண்ட செல்லும் சந்திப்பு தடுக்கப்படுகின்றது.
- சீரியக்க முறை (பாதுகாப்பு காலம்). விலகல் முறை, தொடர் தவிப்பு, பாலூட்டும் கால மாத விடாயின்மை ஆகியன இயற்கை கருத்தடை முறைகளாகும்.

7) சீரியக்க முறை / கால இடைவெளி முறை :

- மாதவிடாய் சுழற்சியின் 14 ஆம் நாள் வாக்கில் அண்ட செல் வெளியேற்றம் நடைபெறும். வெளியேறிய அண்ட செல் ஏறத்தாழ 2 நாட்கள் உயிருடன் இருக்கும்.
- விந்தணுக்கள், பெண்ணின் இனப்பாதையில் சுமார் 72 மணிநேரம் உயிருடன் இருக்கும். இந்த காலத்தில் கலவியை தவிர்ப்பதன் மூலம் கருத்தரித்தலைத் தவிர்க்கலாம்.

8) பாலுணர்வு தொடர் தவிர்ப்பு முறை :

- இது மிகவும் எளிய நம்பகமாக முறையாகும். கலவியை குறிப்பிட்ட காலத்திற்கு தவிர்ப்பதன் மூலம் கருத்தரித்தல் தடுக்கப்படுகிறது.

TN Kalvi Online · tnkalvi.online/study-materials/class-12-bio-zoology-unit-3-reproductive-health-notes-tm · Prepared by P. Senguttuva…

tnkalvi.online

9) <u>விலகல் முறை கருத்தடை</u>:

* பழைமையான இம்முறையில் விந்தணுக்கள் கலவிக் கால்வாயை அடையாதபடி ஆண்கள் விந்து திரவ வெளியேற்றத்துக்க முன் விலகிக் கொள்வர்.

10) <u>பாலூட்டும் கால மாத விடாயின்மை</u>:

⊗ பொதுவாக பெண்களில் பிரவசத்திற்குப் பின் 6 முதல் 8 வாரங்களில் மாதவிடாய் சுழற்சி மீண்டும் தொடங்கும்.
⊗ எனினும், தாய் பாலூட்டுவதால் இயல்பான அண்டசெல்லாக்க சுழற்சி மீண்டும் தொடங்க ஆறு மாதங்கள் வரை தாமதமாகலாம். இந்த தாமத நிலைக்கு "பாலூட்டுதல் கால மாத விடாயின்மை" என்று பெயர்.
⊗ தாயின் இரத்தத்தில் புரோலாக்டின் அளவு அதிகரிப்பதால், கொனடோட்ரோபின் ஹார்மோன் உற்பத்தி தடுக்கப்படுகிறது. இதன் விளைவாக மாதவிடாய் சுழற்சி தடுக்கப்படுகின்றது.

11) <u>நிரந்தர பிறப்புக் கட்டுப்பாடு முறைகள் எனப்படுபவை யாவை</u> ?

◈ இந்த நிரந்தர முறை என்பது கருத்தரிப்பதை விரும்பாத, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் இனப்பெருக்க ஆற்றலை நீக்குதல்.
◈ அண்ட நாளம்/விந்து நாளம் வெட்டி, இணைந்து முடிச்சிட்டுக் கட்டப்படுகின்றன.
◈ இதன் மூலம் இனச்செல்களின் இயக்கம் மற்றும் கருத்திரித்தல் ஆகியவை தடுக்கப்படுகின்றது.

12) <u>மருத்துவ ரீதியான கருக்கலைப்பு என்பது என்ன</u> ?

⊗ கருவளர்ச்சியை முடிவுக்கு கொண்டு வரும் மருத்துவ முறை மருத்துவ ரீதியான கருக்கலைப்பு ஆகும்.
⊗ கருவளர்ச்சியின் ஆரம்பகட்டமான 12 வார (முதல் மும்மாதம்) காலத்திற்குள் கருக்கலைப்பு செய்வது மிகவும் பாதுகாப்பானதாகும்.
⊗ இதன் பெண்ணின் இனப்பெருக்கத்திறன் பாதிக்கப்படுவதில்லை.

13) <u>பால்வினை நோய்கள் பரவும் வழிகள் யாவை</u> ?

1. பால்வினை நோய்த்தொற்று உள்ளவருடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்வதன் மூலம் இத்தொற்று பரவுகிறது.
2. நோயாளி பயன்படுத்திய உட்செலுத்து ஊசிகள்.
3. அறுவை சிகிச்சைக் கருவிகள் போன்றவற்றைப் பகிர்வதன் மூலம்.
4. இரத்தம் செலுத்துதல் மற்றும் தொற்று கொண்ட தாயிடம் இருந்து சேய்க்கும் பரவுகின்றன.

14) <u>பாக்டீரியா பாலிவினைத் தொற்று நோய்கள் யாவை</u> ?

θ வெட்டை நோய் (கொனோரியா), கிரந்தி (சிபிலிஸ்), கான்க்ராய்டு (மெதுப்புண்), கிளாமிடியாஸிஸ், லிம்போகிரானுலோமா வெனரியம் என்னும் அரையாப்புக் கட்டி போன்றவை பாக்டீரியா பாலிவினைத் தொற்று நோய்கள் ஆகும்.

15) <u>வைரஸ் தொற்றுதலினால் ஏற்படும் பால்வினை நோய்கள் யாவை</u> ?

1. பிறப்புறுப்பு அக்கி.
2. பிறப்புறுப்பு மருக்கள்.
3. கல்லீரல் அழற்சி-B.
4. எய்ட்ஸ்.

16) <u>பால்வினை நோய்களை வருமுன் காத்தல் எவ்வாறு</u> ?

1. முன்பின் தெரியாதவருடன் அல்லது பலருடன் பாலுறவு கொள்வதை தவிர்த்தல்.
2. கருத்தடை உறைகளைப் பயன்படுத்துதல்.
3. சந்தேகம் இருக்கும் பட்சத்தில் மருத்துவ ஆலோசனையுடன் முழுமையான சிகிச்சை மேற்கொள்ளுதல்.

tnkalvi.online

17) மலட்டுத்தன்மை என்றால் என்ன ?

⊗ தடையற்ற பாலிய இணை வாழ்விற்குப் பிறகு கருவுற இயலாமை அல்லது குழந்தையை உருவாக்க இயலாமை மலட்டுத்தன்மை எனப்படும்.

⊗ ஒரு ஆண் ஒரு பெண்ணின் அண்டத்தை கருவுறச் செய்யும் அளவிற்கு தரமான அல்லது போதுமான எண்ணிக்கையில் விந்து செல்களை உருவாக்க இயலாமை அல்லது ஒரு பெண்ணாக கருத்தரிக்க இயலாதத் தன்மை மலட்டுத்தன்மை எனப்படும்.

18) கருமுட்டையை அண்டநாளத்தினுள் செலுத்துதல் (Zygote Infra Fallopian Transfer - ZIFT) :-

◈ இம்முறையில் 8 பிளாஸ்டோமியர்களைக் கொண்ட கருமுட்டையை லேப்ராஸ்கோப்பி முறையில் அண்டநாளத்தினுள் செலுத்தப்படுகிறது.

◈ கருமுட்டையில் இயல்பான செல்பிரிதல் நிகழ்ந்து கருக்கோளம் தோன்ற கருப்பையை நோக்கி நகர்ந்து, பதிகின்றது.

19) கருப்பை உள் இடமாற்றம் (Intra Uterine Transfer – IUT):-

◈ 8 பிளாஸ்டோமியர்களை விட அதிகமான செல்களைக் கொண்ட கருவானது கருப்பையினுள் செலுத்தப்பட்டு முழுவளர்ச்சி அடைகிறது.

20) அண்டநாளத்தினுள் இனச்செல் இடமாற்றம் (Intra Cytoplasmic Sperm Injection- ICSI):-

▣ இம்முறையில், அண்டகத்திலிருந்து முட்டைகள் சேகரிக்கப்பட்டு விந்துசெல்களுள் சேர்த்து ஒரு அண்ட நாளத்தினுள் வைக்கப்படுகின்றது.

▣ கருவுறுதல் நிகழ்ந்த உருவாகும் கருமுட்டை கருப்பையை நோக்கி நகர்ந்து கருப்பையின் உட்படலத்தில் பதிகின்றது.

21) அண்ட சைட்டோபிளாசத்தினுள் விந்து செல்களை செலுத்துதல் (ICSI) :-

⦿ இம்முறையில் ஒரே ஒரு விந்து செல்களை முட்டையின் குவியப்புள்ளியில் செலுத்தி கருவுறுதல் செய்யப்படுகின்றது. அதாவது, முட்டையின் சைட்டோபிளாசத்திற்குள் விந்து செல்லானது மிக கவனமாகச் செலுத்தப்படுகின்றது.

⦿ இதில் கருவுறுதல் 75% - 85% சதவீதம் ஆகும். கருமுட்டையை 8 செல் கருக்கோள நிலையை அடைந்த உடல் பெண்ணின் கருப்பைக்குள் மாற்றப்பட்டு கர்ப்பமடையச் செய்யப்படுகின்றது.

22) வாடகைத் தாய்மை:-

☯ தாய்மை அடைய முடியாத பெண்களுக்கு, வேறொரு பெண் ஒப்பந்த முறையில் கருவைச் சுமந்து குழந்தையைப் பெற்றுத்தரும் முறை வாடகைத் தாய்மை எனப்படும்.

☯ இச்செய்முறையில் உடல் வெளிக்கருவுறுதல் (IVF) முறையில் கரு உருவாக்கப்பட்டு வாடகைத் தாயின் கருப்பைக்குள் வைக்கப்பட்டு கருவளர்க்கப்படுகிறது.

☯ இதன்மூலம் பிறக்கும் குழந்தைக்கு, தாய்மை அடைய முடியாத பெண் தாயாகும் பேறு பெறுகின்றார்.

23) ஆண்களின் மலட்டுத்தன்மை தடுப்பு:-

♦ விந்து செல்கள் இல்லாத விந்து திரவம் குறைந்தபட்சம் இரு முறை வெளிப்பட்டால் இந்நிலைக்கு ஏஜுஸ்பெரிமியா (Azoospermia) என்று பெயர்.

♦ இந்நிலை மொத்த மக்கள் தொகையில் சுமார் 1% மக்களிடம் காணப்படுகின்றது.

tnkalvi.online

24) விந்தகத்திலிருந்து விந்து சேகரித்தல்:-

- இம்முறையில், நுண்ணிய அறுவை மூலம் விதைப்பையைத் துளையிட்டு விந்தகத்திலிருந்து விந்து சேகரிக்கப்படுகிறது.
- இக்கீறல் வழியாக நுண்ணோக்கி உதவியுடன் ஒன்று அல்லது இரு விந்தகங்களிலும் உள்ள விந்தக நுண்கழல்களை விரிவடையச் செய்து விந்து செல் உற்பத்தியாகும் பகுதியிலிருந்து சிறிதளவுத் திசுவை வெளியே எடுத்து விந்து செல்களின் உற்பத்தி மேம்படுத்தப்படுகிறது.
- இம்முறை தொன்மையான உயிர்த்திசு தொழில் நுட்பத்தை விட மேம்பட்ட முறையாகும்.

5 - மதிப்பெண் வினாக்கள்

1) குடும்ப நலத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பெரும் பணிகள் யாவை ?

1. உடல் நலம் மிக்க சமுதாயத்தைக் கட்டமைக்கத் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மருத்துவ உதவி அளித்தல்.
2. விடலைப்பருவம் மற்றும் அதன் சார்பான மாற்றங்கள் பற்றிய தகவல்களைத் தரும் பாலியல் கல்வியை பள்ளிகளில் கொண்டு வருதல்.
3. தம்பதியர் மற்றும் திருமண வயதினர்க்கு குடும்ப கட்டுப்பாடு விதிகள் மற்றும் பிறப்புக் கட்டுப்பாடு முறைகள் பற்றி அறிவுறுத்தல்.
4. கர்ப்பமடைந்த பெண்கள் பாதுகாப்பு, மகப்பேற்றுக்குப் பிந்தைய தாய்-சேய் முக்கியத்துவம் போன்றவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
5. அரசு மற்றும் அரசு சாரா முகவாண்மைகளுக்கு ஆதரவு அளித்து இனப்பெருக்கம் சார்ந்த புதிய முறைகளைக் கண்டறிந்து நடைமுறையிலுள்ள குடும்பக் கட்டுப்பாடு மேம்படுத்த ஊக்கமளித்தல்.

2) தடுப்பு முறை கருத்தடையை விளக்குக ?

✳ இம்முறையில் அண்டசெல் மற்றும் விந்து செல் சந்திப்பு தடுக்கப்படுவதால் கருவுறுதல் நடைபெறுவதில்லை.

அ) வேதிப்பொருள் தடுப்பு :

◈ நுரைக்கும் மாத்திரைகள், உட்கரையும் மாத்திரைகள், ஜெல்லிகள் மற்றும் களிம்புகள் , ஆகியவை கலவிக் கால்வாயில் விந்தணுக்களை செயலிழக்கச் செய்யும் சில வேதிப்பொருட்கள் ஆகும்.

ஆ) இயக்கமுறைத் தடுப்பு :

⊗ இது மெல்லிய படல அமைப்பு கருத்தடை உறை ஆகும். இது இனப்பெருக்கப் பாதையில் விந்தணு நுழைவது தடுக்கப்படுகின்றது. மேலும் கருத்தடை உறைகளின் பயன்பாடு AIDS போன்ற பால்வினை நோய்களில் இருந்தும் பாதுகாப்பளிக்கின்றது.

⊗ திரைச்சவ்வுகள், கருப்பைவாய் மூடிகள், மறைப்புத்திரைகள் போன்றவை பெண்களின் கலவிக் கால்வாயில் பொருத்தப்படுவதால் கலவியின் போது விந்து செல்கள் உள் நுழைவது தடுக்கப்படுகின்றது.

இ) ஹார்மோன் வழி தடுப்பு:

- இப்பொருட்கள் அண்டகத்திலிருந்து அண்ட செல்கள் விடுபடுதலைத் தடுப்பதுடன், கருப்பை வாய் திரவத்தைக் கெட்டியாக்கி விந்து செல்கள் அண்ட செல்லுடன் இணைவதைத் தடுக்கின்றது.

ஈ) வாய்வழி கருத்தடை மாத்திரைகள்:

θ இந்த மாத்திரைகளைப் பயன்படுத்துவதால் FSH மற்றும் LH ஹார்மோன்களின் உற்பத்தி தடுக்கப்பட்டு, அண்ட செல் விடுபடுதல் தவிர்க்கப்படுகின்றது. இதில், செயற்கை புரோஜெஸ்டிரோன் மற்றும் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன்கள் உள்ளன.

tnkalvi.online

உ) உள்கருப்பை சாதனங்கள்:

- இவை மருத்துவ நிபுணர்களால் பெண்களின் கலவிக் கால்வாய் வழியாக கருப்பையினுள் பொருத்தப்படும் கருவியாகும். இவை தாமிரம் வெளிவிடும் வகை, ஹார்மோன் வெளிவிடும் வகை மற்றும் மருந்தில்லா வகை என பலவகைகளில் கிடைக்கின்றன. இதன் வெற்றி வீதம் 95% முதல் 99% ஆகும்.

ஊ) தாமிரம் வெளிவிடும் உள்கருப்பை சாதனங்கள்:

- CuT-380A, NovT Cu7, CuT 380Ag., multiload 375 போன்ற கருவிகள் கருப்பைக்குள் வெளிவிடும் தனித்த தாமிரம் மற்றும் தாமிர உப்புகள் விந்து இயக்கத்தை தடைசெய்கின்றன. இது கருப்பையினுள் 5 முதல் 10 ஆண்டுகள் வரை இருக்கலாம்.

எ) ஹார்மோன் வெளிவிடும் உள் கருப்பை சாதனங்கள்:

- புரோஜெஸ்டாசெர்ட் மற்றும் LNG 20 என்பன சில ஹார்மோன் வெளிவிடும் உள் கருப்பை சாதனங்கள் ஆகும். இதிலிருந்து வெளிப்படும் ஹார்மோன் விந்து செல்கள் கருப்பை வாயினுள் நுழைவதைத் தடை செய்கின்றன.

ஏ) மருந்தில்லா உள் கருப்பை சாதனங்கள்:

- இவை நெகிழி (அ) துருப்பிடிக்காத இரும்பால் செய்யப்பட்டுள்ளன. லிப்பஸ் வளையம் என்பது இரட்டை S வடிவ நெகிழிக் கருவியாகும்.

3) கருப்பைவாய் புற்றுநோய் பற்றி விரிவாக விவரி ?

1. நோய்க் காரணி - மனித பாப்பில்லோமா வைரஸ் கருப்பைவாய் புற்றுநோயை தோற்றுவிக்கின்றது.
2. அறிகுறிகள் - கருப்பைவாய் இயல்புக்கு மாறான வளர்ச்சியை அடைகின்றன, இடுப்புவலி, கலவிக்கால்வாய் திரவ மிகைப்போக்கு, இயல்புக்கு மாறான இரத்தப்போக்கு போன்றன இதன் அறிகுறிகள் ஆகும்.
3. நோயை உருவாக்கம் காரணிகள் - பலருடன் பாலியல் தொடர்பு, கருத்தடை மாத்திரைகளை நீண்ட நாட்களாக பயன்படுத்துதல்.
4. கண்டறியும் சோதனை -
   - HIV ஆய்வு மற்றும் பாப் பூச்சு சோதனை போன்ற கூட்டுச்சோதனைகள் மூலம் கண்டறியலாம்.
   - எக்ஸ்ரே,CT ஸ்கேன்,MRI மற்றும் PET ஸ்கேன் போன்றவை மூலம் இந்நோயின் நிலைகளை அறியலாம்.
   - இதனை குணப்படுத்த கதிர்வீச்சு சிகிச்சை, அறுவை சிகிச்சை, வேதிமருந்து சிகிச்சை பயன்படுகின்றது.
5. தடுப்பு நடவடிக்கைகள் -
   - 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை பரிசோதனை செய்துக்கொள்ளல்.
   - தடுப்பூசிகள் போடுதல், வாழ்க்கை முறையில் மாற்றம் செய்தல் மூலம் இந்நோய் வராமல் தடுக்கலாம்.
   - சத்தான உணவு, புகையிலை பயன்பாடு தவிர்த்தல், இளவயது திருமணத்தை தவிர்த்தல்.
   - ஓரிணை இனப்பெருக்க முறை, சீரான உடற்பயிற்சி மூலம் இந்நோய் தோன்றும் வாய்ப்பை குறைக்கலாம்.

4) மலட்டுத் தன்மை ஏற்பட காரணங்கள் யாவை ?

1. பிட்யூட்டரி சுரப்பி அல்லது இனப்பெருக்க உறுப்புகளில் கட்டிகள் உருவாதல்.
2. இனப்பெருக்க ஹார்மோன்கள் உற்பத்திக்குக் காரணமாக மரபணுக்களில் ஏற்படும் திடீர் மாற்றங்கள்.
3. கருப்பைவாய் மற்றம் அண்டநாளங்களில் குறை வளர்ச்சி.
4. இளவயதில் ஊட்டச்சத்துக் குறைபாடு, நீண்ட கால மன அழுத்தம்.
5. காட்மியம் போன்ற கன உலோகங்கள் கொண்ட நச்சுப்பொருட்களை உட்கொள்ளல்.
6. தீவிர குடிப்பழக்கம், புகையிலை மற்றும் போதைப்பொருள் பயன்பாடுகள்.
7. இன செல் சுரப்பிகளின் பாதிப்பு,அதிக வயது ஆகியவை.

tnkalvi.online

5) மலட்டுத் தன்மைக்கான பிற காரணங்கள்:

1. இடுப்புக்குழி வீக்க நோய், கருப்பை தசைநார்க் கட்டிகள், கருப்பை உட்படல அழற்சி போன்றவை பெண்களின் மலட்டுத்தன்மைக்கான பொதுவான காரணங்கள் ஆகும்.
2. பெண்களின் உடலில் கொழுப்பு அளவு குறைதல் அல்லது பசியின்மை, அதாவது உடல் எடை கூடிவிடுமோ என்ற அச்சத்தால் உணவு உண்பதில் ஏற்படும் மனநலக்கோளாறு.
3. ஆண்கள் இறுக்கமான உடைகள் அணிவதால் விந்தகத்தின் வெப்பநிலை உயர்ந்து விந்து செல் உற்பத்தி பாதிக்கப்படுதல்.
4. நன்கு கீழிறங்காத விந்தகம் மற்றும் வேரிகோசீல் எனப்படும் விதைப்பை சிரைகளின் வீக்கம்.
5. விந்தகம் மற்றும் அண்டகங்களின் குறை வளர்ச்சி.
6. பெண்களில் தன் வாழ்க்கைத் துணைவரின் விந்துசெல்களுக்கு எதிராக எதிர்ப்புப் பொருள் உருவாதல்.
7. ஆண்களில் தங்கள் சொந்த விந்துசெல்களுக்கு எதிராக சுயதடைகாப்பு விளைவு உருவாதல்.

6) இனப்பெருக்க துணை தொழில் நுட்பம் என்றால் என்ன ? அதனை விளக்குக ?

- இனச்செல்கள் அல்லது மற்றம் கருமுட்டைகளை உடலுக்கு வெளியில் கையாண்டு கர்ப்பம் அடையச் செய்யும் செயல்முறைத் தொகுப்பு இனப்பெருக்கத் துணை தொழில் நுட்பம் எனப்படும்.
- இது மலட்டுத் தன்மையுடைய தம்பதிகள் கருத்தரிக்கும் வாய்ப்புக்களை அதிகரிக்கின்றது.
- இத்தொழில் நுட்பத்தில் கருப்பையினுள் விந்தணுக்களை செலுத்துதல்(IUI), உடல் வெளிக்கருவுறுதல்(IVF), கருமுட்டையை அண்ட நாளத்தினுள் செலுத்துதல்(ZIFT),
- இனச் செல்களை அண்ட நாளத்தினுள் செலுத்துதல் (GIFT), , கரு இடமாற்றம் (ET) , அண்ட செல் சைட்டோபிளாசத்தினுள் விந்து செல்களை செலுத்துதல் (ICSI) .
- கரு பதிவுக்கு முன்பே மரபியல் குறைகளைக் கண்டறிதல்.
- அண்டசெல் மற்றும் விந்து செல்கள் தானம் மற்றும் வாடகைத் தாய்மை ஆகியன அடங்கும்.

7) கருப்பையினுள் விந்து செல்களை உட்செலுத்துதல் (IUI) முறையை விளக்குக ?

- இச்செயல் முறை குறைந்த எண்ணிக்கையில் விந்து செல்களை உற்பத்தி செய்யும் ஆண்களுக்கச் செய்யக்கூடிய சிகிச்சை முறையாகும்.
- இம்முறையில் கணவர், உடல் நலமிக்க விந்துக் கொடையாளரிடமிருந்து விந்து திரவம் சேகரிக்கப்படுகிறது.
- அண்டகத்தைத் தூண்டி அதிக அண்டசெல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- பின்னர் சேகரிக்கப்பட்ட விந்து செல்கள் நுண்குழல் மூலம் கலவிக் கால்வாய் வழியாக கருப்பையினுள் செலுத்தப்படுகின்றன. பின்னர்,
- விந்து செல்கள் அண்ட நாளத்தை நோக்கி நீந்திச் சென்று கருவுறுதல் நிகழ்ந்து இயல்பான கர்ப்பம் ஏற்படும்.

8) உடல்வெளிக் கருவுறுதல் (IVF) அல்லது சோதனைக்குழாய் குழந்தை என்றால் என்ன ?

- இத்தொழில் நுட்பத்தில் அண்ட செல்கள் மற்றும் விந்து செல்கள் உடலுக்கு வெளியில் ஆய்வகத்தில் இணைய வைக்கப்படுகின்றன.
- இவ்வாறு கருவுற்ற ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட கருவுற்ற முட்டைகள் பெண்ணின் கருப்பையினுள் செலுத்தப்படுகின்றன. அங்கு அவை கருப்பை சுவரில் பதிந்து வளரத் தொடங்குகின்றன.
- மீதமுள்ள உபரி வளர்க்கருக்கள், உறைநிலை பதப்படுத்துதல் முறையில் எதிர்காலத் தேவைக்கு பாதுகாக்கப்படுகின்றன.
- தற்போது இத்தொழில் நுட்பம் பல்வேறு காரணிகளால் ஏற்படும் மலட்டுத் தன்மையை நிவர்த்தி செய்யப் பயன்படுகின்றது.
- அண்டகத்தைத் தூண்டுதல், அண்ட செல்களை வெளிக்கொணர்தல், கருவுறச் செய்தல், கருவளர்ப்பு மற்றும் கரு இடமாற்றம் ஆகியன இத் தொழில் நுட்ப சுழற்சியின் அடிப்படைப் படிநிலைகள் ஆகும்.

tnkalvi.online

9) உடல்வெளிக் கருவுறுதல் (IVF) அல்லது சோதனைக்குழாய் குழந்தை செயல்முறைகள் யாவை ?

- hcg ஊசியை உடலில் செலுத்திய 34 முதல் 37 மணி நேரம் கழித்து பொது மயக்கமூட்டல் செய்யபடுகிறிது.
- சிறிய அறுவை சிகிச்சை மூலம் மீயொலி வழிகாட்டியைப் பயன்படுத்தி பெண்ணின் அண்டகத்திலிருந்து அண்டம் வெளியே கொண்டுவரப்படுகின்றது.
- இம்முட்டை/அண்டம் பிற புறச்செல்களிலிருந்து பிரிக்கப்படுகிறது அதே வேளையில் விந்து செல்களும் சிறப்ப ஊடகத்தைப் பயன்படுத்தி தயார் செய்யப்படுகின்றன.
- பின்னர்,கருமுட்டையானது செல் பிரிதலுக்க உட்படுத்தப்பட்டு எட்டு செல் கருக்கோள நிலையில் கருப்பையினுள் செலுத்தப்படுகின்றது.
- 8 செல் நிலைக்கு மேற்பட்ட கருவை, கருப்பையினுள் செலுத்தும் முறை "கருமாற்று தொழில் நுட்பம்" எனப்படும்.

10) கருவின் குறைபாடுகளை கர்ப்பகாலத் தொடக்கத்திலேயே கண்டறியும் முறைகளை விளக்குக ?

1. மீயொலி வரியோட்டம்:-
   - இது ஆபத்தில்லா முறை, இதில் வயிற்றுப் பகுதியில் கொடுக்கும் அழுத்தம் மிதமான அசௌகரியத்தை மட்டுமே தருகின்றது.
   - இம்முறையில் கதிர்வீச்சுப் பயன்படுத்தப்படுவதில்லை.
   - மீயொலி வரைவியை பயன்படுத்தி முதல் மும்மாத கருவளர்ச்சியின் போதே பிறப்புத் தேதி, கருவின் எண்ணிக்கை மற்றும் கர்ப்பகாலத் தொடக்கத்தில் தோன்றும் பிரச்சனைகளைக் கண்டறியலாம்.

2. பனிக்கடத் துளைப்பு:-
   - இச் செயல்முறை பொதுவாக 15 - 20 வார கருவளர்ச்சி கொண்ட கருவுற்ற பெண்களில் செய்யப்படுகின்றது.
   - இச்செயல் முறையில் மிக மெல்லிய, நீண்ட ஊசியை வயிற்றறை வழியாக பனிக்குடப் பைக்குள் செலுத்தி சிறிதளவு பனிக்குட திரவ மாதிரி சேகரிக்கப்படுகின்றது.
   - இத்திரவத்தில் வளர் கருவின் உடலிலிருந்து உதிர்ந்த செல்கள் காணப்படுகின்றன.
   - இந்த பனிக்குட திரவ மாதிரியைக் கொண்டு குரோமோசோம்களின் பிறழ்ச்சிகளைக் கண்டறியலாம்.

3. கோரியான் நுண் நீட்சி மாதிரி ஆய்வு:-
   - குழந்தை பிறப்புக்கு முன் தாய் சேய் இணைப்புத்திசுவின் சிறு பகுதியை ஆய்வு செய்து குரோமோசோம் பிறழ்ச்சி ஏதும் இருந்தால் அறியலாம்.

4. கரு கண்காணிப்புக் கருவி :-
   - இதைக் கொண்டு வளர்கருவின் இதயத் துடிப்பு வீதம், கர்ப்பகால இறுதியில் நடைபெறும் செயல்கள் மற்றும் பிரசவவலி போன்றனவற்றைக் கண்டறியலாம்.
   - வளர்கருவின் சராசரி இதயத்துடிப்ப வீதம், நிமிடத்திற்கு 120 முதல் 160 துடிப்புகள் ஆகும். கருவின் இயல்புக்கு மாறான இதயத் துடிப்ப வீதம் ஆக்ஸிஜன் பற்றாக்குறை அல்லது பிற பிரச்சனைகளையும் இக்கருவி காட்டுகிறது.
   - டாப்ளர் கருவி எனும் கையடக்கமான கண்காணிப்புக் கருவி வளர்க்கருவின் இதயத் துடிப்பு வீதத்தைக் கண்டறியப் பயன்படுகின்றது.
   - பெரும்பாலும், மகப்பேறின் போது தொடர் மின்னணு கரு கண்காணிப்பு செய்யப்படுகின்றது.

tnkalvi.online


ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. இனப்பெருக்க மற்றும் குழந்தை நலம் பாதுகாப்பு எனும் குடும்ப நலத்திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு - 1951.
2. மக்கள் தொகையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான விகிதம் - பாலின விகிதம்.
3. தாயின் கருப்பையிலேயே பெண் சிசுவைக் கருக்கலைப்பு செய்வது - பெண்கருக்கொலை.
4. பிறந்த பின் பச்சிளம் பெண் குழந்தைகளை கொல்வது - பெண்சிசுக்கொலை.
5. UNDPS G II எனப்படும் ஐக்கிய நாடுகளில் வளர்ச்சித்திட்ட பாலின சமமின்மைக் குறியீடு பட்டியலில் உள்ள 187 நாடுகளில் நம் நாடு பெற்றுள்ள இடம் - 135.
6. பாலினத்தை முன்கூட்டியே கண்டறியும் தொழில் நுட்பத்தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு - 1994.
7. பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைத் தடுக்கும் சட்டம் - POCSO சட்டம்.
8. பாலியல் தாக்குதல் விதி- தவிர்த்தல், தடுத்தல், நிவர்த்தி ஆகிய பரிந்துரைகளை குற்றவியல் சட்டத்தில் மாற்றங்களை கொண்டு வந்த நீதியரசர் - வெர்மா குழு (2013).
9. மருத்துவ வசதிகளின் மேம்பாடு, வளம் நிறைந்த வாழ்க்கைமுறை ஆகியவற்றால் உயர்ந்துள்ளது எது? - மனித வாழ்நாள் .
10. ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்தியத்திய இந்திய மக்கள் தொகையின் எண்ணிக்கை - 1.26 பில்லியன்.
11. லக்னோவிலுள்ள மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனத்தின் (CDRI) தயாரிப்பான சாஹெலி எனும் கருத்தடை மாத்திரையில் உள்ள ஸ்டீராய்டு அல்லாத பொருள் - செண்ட்குரோமேன்.
12. இந்தியாவின் பிரபலமான கருத்தடை முறையான உள்கருப்பை சாதனங்களின் வெற்றி வீதம் - 95% முதல் 99% .
13. கருக்கலைப்பு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ___ 1971.
14. இது ஒரு புரோட்டோசோவா பாலிவினைத் தொற்று நோயிற்கு எடுத்துக்காட்டு - டிரைகோமோனியாஸிஸ்.
15. பூஞ்சை தொற்றினால் ஏற்படும் பால்வினை நோயிற்கு எடுத்துக்காட்டு - கேன்டிடியாசிஸ்.
16. வளர்கருவின் சராசரி இதயத்துடிப்பின் வீதம், நிமிடத்திற்கு - 120 முதல் 160 துடிப்புகள்.

புத்தக வினாக்கள் / (BOOK BACK QUESTIONS)

9. பனிக்குடத்துளைப்பு என்பது யாது ? இத்தொழில் நுட்பத்திற்கு சட்டப்படியான தடைவிதிப்பது ஏன் ?
   - இம்முறையில் வளர்க்கருவின் 15-20 வார கருவளர்ச்சியில், அதை சூழ்ந்துள்ள பனிக்குட திரவ மாதிரியை மெல்லிய, நீண்ட ஊசியைக் கொண்டு சேகரிக்கப்படுகின்றது.
   - இந்த திரவ மாதிரிக் கொண்டு குரோமோசோம்களின் பிறழ்ச்சிகளைக் கண்டறியலாம்.
   - மேலும் வளர்கருவின் பால் (ஆண்/பெண்) தன்மையைக் கண்டறியலாம். இதனால் சிசுக்கொலைக்கு வாய்ப்பு உள்ளதால், இதற்கு சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

10. அடைப்புக்குள் இருந்து சரியான பதங்களை தேர்வு செய்து கிளைத்த மரத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புக ?



(தடுப்புகள், பாலூட்டும் கால மாதவிடாயின்மை, CuT. கருக்குழல் தடை)

A – தடுப்பு முறை

B – பாலூட்டும் கால மாதவிடாயின்மை

C – கருக்குழல் தடை

D – CuT.

tnkalvi.online

11. கீழ்வரும் கூற்றுகளில் உள்ள பிழைகளைத் திருத்துக ?

அ) கொடையாளியிடமிருந்து பெறப்பட்ட அண்டத்தை கருப்பை நாளத்திற்கு இடமாற்றம் செய்யும் முறை ZIFT ஆகும்.
விடை : கொடையாளியிடமிருந்து பெறப்பட்ட அண்டத்தை கருப்பை நாளத்திற்கு இடமாற்றம் செய்யும் முறை - GIFT.

ஆ) 8 கருக்கோளச் செல்களுக்கு மேல் உள்ள கருவை கருப்பைக்குள் பொருத்தும் முறை GIFT எனப்படும்.
விடை : 8 கருக்கோளச் செல்களுக்கு மேல் உள்ள கருவை கருப்பைக்குள் பொருத்தும் முறை - ZIFT.

இ) மல்டிலோட் 375 என்பது ஒரு ஹார்மோன் வெளிவிடு IUD ஆகும்.
விடை : மல்டிலோட் 375 என்பது தாமிரம் வெளிவிடும் ஒரு உள்கருப்பைச் சாதனம்.

12. குழந்தை வேண்டும் தம்பதியரில் ஆண் விந்து நீர்மத்தை உற்பத்தி செய்ய இயலாமல் போனாலோ அல்லது மிகக் குறைந்த விந்துசெல் கொண்ட விந்து நீர்மத்தை உற்பத்தி செய்தாலோ, அத்தம்பதியர் குழந்தை பெற எம்முறையை பரிந்துரை செய்வீர் ?.

- ✪ கருப்பையினுள் விந்து செல்களை உட்செலுத்துதல் (IUI) முறையை பரிந்துரை செய்யலாம். ஏனெனில்,
- ✪ இச்செயல் முறை குறைந்த எண்ணிக்கையில் விந்து செல்களை உற்பத்தி செய்யும் ஆண்களுக்கச் செய்யக்கூடிய சிகிச்சை முறையாகும்.
- ✪ இம்முறையில் கணவர், உடல் நலமிக்க விந்துக் கொடையாளரிடமிருந்து விந்து திரவம் சேகரிக்கப்படுகிறது.
- ✪ அண்டகத்தைத் தூண்டி அதிக அண்டசெல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- ✪ பின்னர் சேகரிக்கப்பட்ட விந்து செல்கள் நுண்குழல் மூலம் கலவிக் கால்வாய் வழியாக கருப்பையினுள் செலுத்தப்படுகின்றன. பின்னர்,
- ✪ விந்து செல்கள் அண்ட நாளத்தை நோக்கி நீந்திச் சென்று கருவுறுதல் நிகழ்ந்து இயல்பான கர்ப்பம் ஏற்படும்.

13. விரிவாக்கம் தருக :-

அ) ZIFT – கருமுட்டையை அண்ட நாளத்தினுள் இனச்செல் இடமாற்றம்.
ஆ) ICSI - அண்ட சைட்டோபிளாசத்தினுள் விந்து செல்களைச் செலுத்துதல்.

14. நமது இந்திய நாட்டில் முழுமையான இனப்பெருக்க ஆரோக்கியத்தை அடைய மேற்கொள்ள வேண்டிய உத்திகள் யாவை ?

- ✳ உடல் நலம் மிக்க சமுதாயத்தைக் கட்டமைக்கத் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மருத்துவ உதவி அளித்தல்.
- ✳ விடலைப்பருவம் மற்றும் அதன் சார்பான மாற்றங்கள் பற்றிய தகவல்களைத் தரும் பாலியல் கல்வியை பள்ளிகளில் கொண்டு வருதல்.
- ✳ தம்பதியர் மற்றும் திருமண வயதினர்க்கு குடும்ப கட்டுப்பாடு விதிகள் மற்றும் பிறப்புக் கட்டுப்பாடு முறைகள் பற்றி அறிவுறுத்தல்.
- ✳ கர்ப்பமடைந்த பெண்கள் பாதுகாப்பு, மகப்பேற்றுக்குப் பிந்தைய தாய்-சேய் முக்கியத்துவம் போன்றவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- ✳ அரசு மற்றும் அரசு சாரா முகவாண்மைகளுக்கு ஆதரவு அளித்து இனப்பெருக்கம் சார்ந்த புதிய முறைகளைக் கண்டறிந்து நடைமுறையிலுள்ள குடும்பக் கட்டுப்பாடு மேம்படுத்த ஊக்கமளித்தல்.
- ✳ மேற்கண்ட குடும்ப நலத்திட்டம், குழந்தை நலம் பாதுகாப்பு (RCH), POSCO- சட்டம், நீதியரசர் வெர்மா குழு பரிந்துரைகள் மூலம் நாட்டின் முழுமையான இனப்பெருக்க ஆரோக்கியத்தை அடையலாம்.

tnkalvi.online

15. கருக்கொலை மற்றும் சிசுக்கொலை வேறுப்படுத்துக :-

கருக்கொலை	சிசுக்கொலை
கருவை தாயின் கருப்பையிலேயே கருக்கலைப்பு செய்வது.	பிறந்த பின்பு இளம் சிசுவை கொல்வது.

17. பால்வினை நோய்கள் எவ்வாறு பரவுகின்றன ?

- பால்வினை நோய்த்தொற்று உள்ளவருடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்வதன் மூலம் இத்தொற்று பரவுகிறது.
- நோயாளி பயன்படுத்திய உட்செலுத்து ஊசிகள்.
- அறுவை சிகிச்சைக் கருவிகள் போன்றவற்றைப் பகிர்வதன் மூலம்.
- இரத்தம் செலுத்துதல் மற்றும் தொற்று கொண்ட தாயிடம் இருந்து சேய்க்கும் பரவுகின்றன.

18. பால் வினை தொற்று நோய்களைத் தடுக்கும் முறைகளை எழுதுக ?

⊗ முன்பின் தெரியாதவருடன் அல்லது பலருடன் பாலுறவு கொள்வதை தவிர்த்தல்.
⊗ கருத்தடை உறைகளைப் பயன்படுத்துதல்.
⊗ சந்தேகம் இருக்கும் பட்சத்தில் மருத்துவ ஆலோசனையுடன் முழுமையான சிகிச்சை மேற்கொள்ளுதல்.

19. GIFT – முறையில் பெண் இனச்செல்கள் அண்டநாளத்தினுள் இடமாற்றம் செய்யப்படுகின்றது. இனச்செல்கள் கருப்பைக்குள் இடமாற்றம் செய்தால், இதே முடிவு தோன்ற வாய்ப்புள்ளதா ?.

- வாய்ப்பு உள்ளது , ஏனெனில் கணவர் / உடல் நலமிக்க விந்துக் கொடையாளரிடமிருந்து விந்து திரவம் சேகரிக்கப்பட்டு, அதே சமயம் அண்டகத்தைத் தூண்டி அதிக அண்டசெல்கள் உற்பத்தி செய்யவேண்டும்.
- பின்னர் சேகரிக்கப்பட்ட விந்து செல்கள் நுண்குழல் மூலம் கலவிக் கால்வாய் வழியாக கருப்பையினுள் செலுத்தப்படுகின்றன. பின்னர்,
- விந்து செல்கள் அண்ட நாளத்தை நோக்கி நீந்திச் சென்று கருவுறுதல் நிகழ்ந்து இயல்பான கர்ப்பம் ஏற்படும். இந்த முறைக்கு கருப்பையினுள் விந்து செல்களை உட்செலுத்துதல் (IUI) முறையாகும்.

20. பனிக்குடத் துளைப்பு எனும் வளர்கரு பால் கண்டறியும் ஆய்வு, நம் நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது. இது தேவைதானா ? கருத்தைத் தெரிவிக்கவும்.

⊗ அவசியம் தேவை, ஏனெனில் இந்த ஆய்வின் மூலம் வளர்கருவின் பால் (ஆண்/பெண்) தன்மையைக் கண்டறியலாம். இதனால் சிசுக்கொலைக்கு வாய்ப்பு உள்ளதால், இதற்கு சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

21. ஆரோக்கியமான இனப்பெருக்கம் சட்டப்படி கட்டுப்படுத்தப்பட்டுள்ள பிறப்புக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் முறையான குடும்ப நலத்திட்டம் போன்றன மனித வாழ்விற்கு முக்கியமானவை" கூற்றை நியாயப்படுத்து ?

◈ மருத்துவ வசதிகளின் மேம்பாடு மற்றும் வளம் நிறைந்த வாழ்க்கைமுறை ஆகியவற்றால் மனித வாழ்நாள் உயர்ந்துள்ளது.
◈ அதிகரிக்கும் மக்கள் தொகைப் பெருக்கத்தை சமாளிக்க பிறப்புகள் கட்டுப்பாடு மட்டுமே தீர்வாகும்.
◈ " சிறுகுடும்பம் சீரான வாழ்வு" என்ற கருத்தை உணர்ந்து, பல்வேறு கருத்தடை முறைகளைப் பயன்படுத்தி குடும்பத்தைச் சிறிதாக அமைத்துக்கொள்ள மக்களை கட்டுப்படுத்த வேண்டும்.
◈ பயனர் நட்பு, எளிதில் கிடைத்தல், குறைந்தபட்சம் பக்க விளைவு மற்றும் பாலுணர்வு உந்தலை தடை செய்யாமை ஆகியவை ஒரு சிறந்த கருத்தடை அமைப்பின் பண்புகளாகும்.
◈ கருத்தடை முறைகள் - தற்காலிக முறை, நிரந்தர முறை என இரு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.
◈ இயற்கை முறையில் - முன் வேதிப்பொருள் பயன்பாடு முறை, கருவின் பயன்பாடு முறை மற்றும் ஹார்மோன் தடுப்பு முறை போன்றவை அடங்கும்.
◈ நிரந்தர முறையில் அறுவை சிகிச்சை மூலம் கருக்குழல் தடை, விந்து குழல் தடை போன்ற இனப்பெருக்க ஆற்றலை நீக்குதல் இம்முறையில் அடங்கும்.

tnkalvi.online

16. முக்கிய பால்வினை நோய்கள் மற்றும அவற்றின் அறிகுறிகள் யாவை ?

நோயின் பெயர்	நோய்க்காரணி	அறிகுறிகள்	நோய் வெளிப்படும் காலம்
பாக்டீரிய பால்வினைத் தொற்று (Bactrial STI):			
கொனோரியா அல்லது வெட்டைநோய் (Gonorrhoca)	நீஸ்செரியா கொனோரியே (Neisseria gonorrhoeae)	• சிறு நீர் வடிகுழாய், மலக்குடல், தொண்டை, பெண்களின் கருப்பைவாய் ஆகிய பகுதிகளில் பாதிப்பு • பிறப்புப் பாதையில் வலி, சீழ் வடிதல் சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் உணர்வு	2 – 5 நாட்கள்
கிரந்தி அல்லது மேகப்புண் (Syphilis)	டிரிபோனிமா பாலிடம் (Treponema pallidum)	• முதல் நிலை - பாலுறுப்புகளின் புறப் பகுதியில் வலியற்ற புண்கள். • இரண்டாம்நிலை –தோல் புண்கள், சொறி, தோல் தடிப்பு, மூட்டுகளில் வீக்கம் காய்ச்சல் மற்றும் முடி உதிர்வு. • மூன்றாம் நிலை –மூக்கு, கீழ்க்கால் பகுதி மற்றும் அண்ணப் பகுதியில் நாள்பட்ட புண்கள், இயக்க மின்மை, மனநல பாதிப்பு, பார்வைக்கோளாறு, இதயப் பிரச்சனை, மென்மையான பரவும் தன்மையற்ற கட்டிகள் (Gammas) போன்றன.	10 – 90 நாட்கள்
கிளாமிடியாஸிஸ் (Chlamydiasis)	கிளாமிடியா ட்ராகோமேடிஸ் (Chlamydia trachomatis)	• கண் இமை அரிப்பு, சிறுநீரக இனப்பெருக்கப் பாதை, சுவாசப் பாதை மற்றும் கண்ணின் கன்ஜங்க்டிவா ஆகியவற்றில் தூண் எபிதீலிய செல்கள் பாதிப்பு	2 – 3 வாரங்கள் அல்லது 6 வாரங்கள் வரை
லிம்போகிரானுலோமா வெனரியம் (Lymphogranuloma venereum)	கிளாமிடியா ட்ராகோமேடிஸ் (Chlamydia trachomatis)	• பிறப்புறுப்பின் தோல் அல்லது கோழைப்படல பாதிப்பு, சிறுநீர் வடிகுழாய் அழற்சி, உள்கருப்பை வாய் அழற்சி, ஆங்காங்கே கேடு தரும் புண்கள். இனப்பெருக்க உறுப்பு யானைக்கால் நோய்	

tnkalvi.online

வைரஸ் பால்வினைத் தொற்று (Viral STI)			
பிறப்புறுப்பு அக்கி (Genital herpes)	ஹெர்பஸ் சிம்ப்லெக்ஸ் வைரஸ் (Herpes simplex virus)	• பெண்களின் பெண்குறி வெளியிதழ், கலவிக்கால்வாய், சிறுநீர் வடிகுழாய் ஆகியனவற்றைச் சுற்றி புண்கள், ஆண்களில் ஆண்குறியைச் சுற்றி புண்கள். • சிறுநீர் கழிக்கும் போது வலி. • மாதவிடாய் சுழற்சிகளுக்கிடையே இரத்தப்போக்கு • தொடை இடுக்குகளின் நிணநீர் முடிச்சுகளில் வீக்கம்	2 – 21 நாட்கள் (சராசரி 6 நாட்கள்)
பிறப்புறுப்புமருக்கள் (Genital warts)	மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) (Human papilloma virus)	• இன உறுப்புகளின் வெளிப்பகுதி, கருப்பைவாய், மலவாயைச் சுற்றிய பகுதிகளில் கடினமான புடைப்புகள் (கட்டிகள்)	1 – 8 மாதங்கள்
கல்லீரல் அழற்சி (Hepatitis–B)	ஹிபாடிடிஸ் – B வைரஸ் (HBV) (Hepatitis –B Virus)	• சோர்வு, மஞ்சள் காமாலை, காய்ச்சல், தோல் தடிப்பு, வயிற்று வலி, • கல்லீரல் இறுக்கம், இறுதி நிலையில் கல்லீரல் செயலிழப்பு	30 – 80 நாட்கள்
எய்ட்ஸ் (AIDS)	மனித தடைகாப்பு குறைப்பு வைரஸ் (HIV)	• நிணநீர் முடிச்சுகள் பெரிதாதல், நீண்டநாள் காய்ச்சல், நீண்டநாள் வயிற்றுப்போக்கு, உடல் எடை குறைதல், இரவில் வியர்த்தல்,	2 – 6 வாரங்கள் முதல் 10 ஆண்டுகளுக்கு மேலும்.

பூஞ்சை பால்வினைத் தொற்று (Fungal STI)			
கேன்டிடியாஸிஸ் (Candidiasis)	கேன்டிடா அல்பிகன்ஸ் (Candida albicans)	• வாய், தொண்டை, குடற்பாதை மற்றும் கலவிக்கால்வாய் ஆகிய பகுதிகளில் தாக்கம். • கலவிக்கால்வாயில் அரிப்பு (அ) புண்கள் • கலவிக்கால்வாய் திரவம் மிகைப் போக்கு • வலியுடன் சிறுநீர் கழித்தல்	–
புரோட்டோசோவா பால்வினைத் தொற்று (Protozoan STI)			
டிரைகோமோனியாசிஸ் (Trichomoniasis)	டிரைகோமோனாஸ் வாஜினாலிஸ் (Trichomonas vaginalis)	• கலவிக்கால்வாய் அழற்சி, பச்சை மஞ்சள் கலந்த கலவிக் கால்வாய் திரவ வெளிப்பாடு, அரிப்பு மற்றும் எரிச்சல் உணர்வு, சிறுநீர் வடிகுழல் அழற்சி, விந்தக மேல் சுருள் நாள அழற்சி, புரோஸ்டேட் சுரப்பி அழற்சி	4–28 நாட்கள்